## குருநாகல் மாநகர சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 திகதி சபையின் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருநாகல் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகநெகும கிராமப் பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 7 நிர்மாண வேலைகளுக்காக சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 2,703,747 இற்கான தொகை ஒன்று மூலதன கடன்பட்டோர்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் மேலும் 3 நிர்மாண வேலைகளுக்காக கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 886,985 இற்கான தொகை ஒன்று மூலதன வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையினால் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 51,126,456 தொகையின் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) தனியார் கம்பனி ஒன்றில் இருந்து 2006 ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 6,762,000 இற்கான நிலுவை வாகனத் தரிப்புக் கட்டணத்தின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்தி கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது குருநாகல் பஸ் நிலையத்தில் மேல் மாடியில் அமைந்துள்ள 05 கடைகளுக்கான எதிர்வரும் வருடங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 415,891

இற்கான முற்கொடுப்பனவு தொகை மற்றும் அதனது வட்டி ரூபா 143,198 பெறுவனவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் வருட இறுதியில் உள்ளவாறு மேற்கூறிய ரூபா 559,089 இற்கான தொகை நிலுவை கடைவாடகையில் இருந்து கழித்து காட்டியிருந்தமையால் மூலதனப் பெறுவனவுகள் கடன்பட்டோர் அதே தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) கடைவாடகை பதிவேட்டின் பிரகாரம் 09 பாதி நிலையான கடைகளில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 28,861 தொகை மற்றும் புதிய பஸ் நிலைய மேல் மாடியில் 04 கடைகளில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 142,082 இற்கான நிலுவை கடை வாடகை வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த முத்திரை கட்டண வருமானக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 5,070,465 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 546,998 என காட்டப்பட்டுள்ளமையால் வருமானக் கடன்பட்டோர் ரூபா 4,523,467 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) பஸ் நிலையத்தை சுத்தம் செய்வதை குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக குறிப்பிட்ட ஆவணங்களின் மூலம் உறுதி செய்யப்பட்ட நிலுவை குத்தகை வருமானம் ரூபா 5,230,880 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) முன்வரும் ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 606,897 இற்கான பஸ் நிலைய முற்பெறுவனவு மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் 2012 ஆண்டின் போது நன்கொடை ஒன்றாகச் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,459,300 பெறுமதியான டிரக்டர் மற்றும் டெய்லர் வண்டிகளின் பெறுமதியை மீளாய்வாண்டிற்கான மூலதனப் பெறுவனவுகள் மற்றும் மூலதன செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

------------------------------------------

உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ஒழுங்கு முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதிவரை அந் நிதியத்திற்காக செலுத்த வேண்டியிருந்த மீதி ரூபா 51,126,456 தொகை ஒன்று காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான பெறுவனவுகள், பில் போட்டவைகள் மற்றும் இறுதி மீதியின் கீழ் 18 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேட்டின் பிரகாரம் இடையே நேரொத்த பெறுமானங்களிடையே ரூபா 24,219,747 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 90,920,365 ஆக காணப்பட்டது. அவற்றில் ரூபா 83,504,069 தொகை தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 107,375,407 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 37,816,297 தொகை 01 வருடத்தை மிகைத்த காலத்தை சேர்ந்தவையே.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 162,969,938 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விரிவான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 89,067,127 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 66,330,174 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 22,736,953 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 5,250,235 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 64,965,055 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 29,352,307 ஆகும்.

2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 421,792,280 இல் நூற்றிற்கு 38 ஆகிய ரூபா 159,384,751 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் ஆகும். அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 5,250,235 இற்கான தொகை முற் கொடுப்பனவுப் பணம்(கீமனி) மற்றும் நன்கொடைகள் அடங்கியிருந்ததுடன் கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களினால் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணத்தினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 332,725,153 இல் நூற்றிற்கு 49 ஆகிய ரூபா 161,846,100 தொகையும் தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 58 ஆகிய ரூபா 94,403,086 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 64,965,055 இல் நூற்றிற்கு 41 ஆகிய ரூபா 26,457,126 தொகை சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைளாக காணப்பட்டதுடன் மீதி நூற்றிற்கு 59 ஆகிய ரூபா 38,507,929 தொகை நிலையான சொத்துக்கள் உரித்தாக்கல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்காக

செலவிடப்பட்டிருந்தது. மேலும் கமநெகும, மகநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளை இனங்கண்டு மூலதன செலவுகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களின் வேலை பூர்த்தியடைந்திருத்தல் அல்லது செயற்படாது காணப்பட்டமை காரணமாக அவற்றோடு தொடர்புடைய 07 சேமிப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,087,803 இற்கான மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட பதவியணிக் கடன் மீதி ரூபா 837,131 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 334,468 தொகை 3 வருடங்களை விஞ்சிய நிலுவை கடன் மீதியாகும்.

2.4 வருமான நிருவாகம்

--------------------------------

2.4.1 வீதவரி

----------

மீளாய்வாண்டிற்கான 13320 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 45,068,061 இற்கான வீதவரி வருமானம் பில் போடப்பட்டிருந்தது. அத்துடன் அவற்றில் நூற்றிற்கு 51 என ரூபா 23,081,050 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. 2004 ஜூலை 30 திகதி வரை இந்த நிலுவையில் இருந்து ரூபா 1,207,816 இனால் அறவிடப்பட்டிருந்தது. அத்துடன், மேலும் 21,873,234 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

2.4.2 நீர்க் கட்டணம்

-----------------------

வருடாந்த நீர் பில் போடப்பட்டவை ரூபா 84,329,924 ஆகக் காணப்பட்டது. அத்துடன், அதன் கீழ் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 42,518,584 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் ரூபா 50,000 உம் ரூபா 100,000 இடையே நிலுவை காணப்படும் 55 நீர் நுகர்வோர் தொடர்பான கூட்டுப்பெறுமதி ரூபா 2,731,711 இற்கான நிலுவை ஒன்றும் ரூபா 100,000 விட மிகையான நிலுவை காணப்படும் 31 நீர் நுகர்வோர் தொடர்பாக ரூபா 16,271,803 இற்கான நிலுவை ஒன்றும் அவதானிக்கப்பட்டது. அதே போல் மூன்று நுகர்வோர் இலக்கங்கள் தொடர்பாக நகர ஆணையாளர் என பில் போடப்பட்ட ரூபா 3,824,306 இற்கான நிலுவை ஒன்றும் நுகர்வோர் இலக்கம் 5163 இன் கீழ் குருநாகல் போதனா வைத்தியசாலை தொடர்பாக ரூபா 10,618,524 இற்கான நிலுவை ஒன்றும் காணப்பட்டது.

2.4.3 கடை வாடகை

-----------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு குருநாகல் புதிய பஸ் நிலையத்தில் காணப்படும் 51 கடைகள் தொடர்பாக வாடகை மற்றும் தாமதக் கட்டணத்துடன் ரூபா 1,412,438 இற்கான

நிலுவை ஒன்றும் முற்கொடுப்பனவு மற்றும் அதனொடு தொடர்புடைய வட்டி என ரூபா 2,431,146 இற்கான நிலுவை ஒன்றும் காணப்பட்டது. அவற்றில் 06 மாதங்கள் மற்றும் 78 மாதங்கள் இடைப்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்படும் 14 கடைகள் தொடர்பாக ரூபா 2,126,961 இற்கான நிலுவை ஒன்றும் காணப்பட்டது.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 462,375 மற்றும் பெறவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 30,339,894 ஆகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 196 கடைகளைக் கொண்ட புதிய சந்தை தொடர் கட்டடத்திற்காக வருடாந்தம் ரூபா 18.9 மில்லியன் பில் போடப்பட்டிருந்த போதும் மின்சாரம், சேவை கட்டணம் மற்றும் பொறுப்பாளி சம்பளம் ஆகிய செலவுகளுக்காக வருடாந்தம் ரூபா 15.7 மில்லியன் செலவிடப்படுகின்றது. அதன் காரணமாக போதியளவு மேலதிக வருமானம் ஒன்றினை உருவாக்கியிருக்கவில்லை. அதே போல் இச் செலவுகளில் சுமார் நூற்றிற்கு 80 (ரூபா மில்லியன் 15) மின்சாரத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. கடை தொகுதியின் மேல் மாடிகளில் காணப்பட்ட தொட்டிகளுக்கு நீர் வழங்கள், பம்பு மூலம் நீர் பாய்ச்சப்படுவது மூலம் மேறகொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறு பாய்ச்சப்படும் நீர் மற்றும் நீர்தொட்டியில் இருந்து விநியோகிக்கப்படும் நீரின் அளவு ஆகியவற்றை இனங்காண்பதற்காக வேறாக நீர்மானி பொறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருநாகலில் அமைந்துள்ள ரஜபில்ல வாடி வீட்டினை புனர்நிர்மாணம் செய்து 11138 சதுரஅடி மற்றும் 1741 சதுரஅடி ஆகிய இரண்டு பகுதிகளாக வாடகைக்கு கொடுப்பதற்கு கேள்வி கோரப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகளில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் காரணமாக கேள்விதாரர்கள் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு இணங்கியிருக்கவில்லை. அத்துடன் அதன் காரணமாக வாடி வீட்டினை வாடகைக்கு கொடுக்க முடியவில்லை.

(இ) சபையினால் 2008 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான காலப்பகுதியில் கட்டட விண்ணப்பங்கள் 535 அங்கீகரிக்கப்பட்டு 202 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. 333 கால நீடிப்பு மேற்கொள்ளப்படாமைகள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் அனைத்து நிர்மாண வேலைகளும் பூர்த்தியடைந்து காணப்பட்டதெனின் இணக்கச் சான்றிதழ் வழங்கப்படாமையால் அறவீடு செய்யக் கூடியதாக இருந்த ரூபா 66,600 இற்கான வருமானம் அல்லது அனைத்து நிர்மாண வேலைகளும் முடிவடைந்து இல்லை எனின் அனுமதிப்பத்திரத்தின் காலம் நீடிக்காமைக்காக அறவிடக் கூடியதாகவிருந்த ரூபா 169,600 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ஈ) குருநாகல் நகரத்தை குறை ஜீவவாயு செரிவு உடைய நகரம் ஒன்றாக மாற்றுவதற்காக பொருத்தமான செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்காக ஆசிய தொழிநுட்ப நிறுவனம் (ATI) மூலம் 2011 மார்ச் மாதத்தில் வழங்கியிருந்த ரூபா 1,000,000 தொகை (ஐ.அ.டோ. 10,000) மானியத்தில் இருந்து குறிப்பிட்ட பணம் வழங்கப்பட்டு சுமார் 2 மாத காலத்திற்கு பின்னர் ரூபா 100,000 செயற்திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியாகிய ரூபா 900,000 தொகையினை 2013 ஆண்டின் போது தாய்லாந்திற்கான வெளிநாட்டு சுற்றுலா ஒன்றிற்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும், அச் சுற்றுலாவின் அனுபவங்கள் தகவு திரண்களின் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள செயற்திட்ட அறிக்கை ஒன்று அல்லது குறைந்த ஜீவவாயு செரிவுடைய நகரமொன்றாக குருநாகல் நகரை மாற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டமொன்றினை அவதானிக்க முடியவில்லை.

3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

(அ) சபையினால் 2012 ஆண்டின் போது மற்றும் 2013 ஆண்டின் போது நிர்மாண வேலைக்கான பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக அங்கிகரிக்கப்பட்டிருந்த விலைகள் மற்றும் அப் பண்டங்களை குறிப்பிட்ட மாவட்ட விலை நிர்ணயக் குழு அறிக்கையிலுள்ள விலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த மணல், கற்கள் மற்றும் ABC போன்ற கட்டடப் பொருட்கள் தொடர்பாக ரூபா 391,159 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) குருநாகல் பஸ் நிலையத்தை சுத்திகரிப்பதற்கான ஒப்பந்தம் 2008 ஆண்டு முதல் பெற்றிருந்த தனியார் நிறுவனத்தில் இருந்து 2014 ஜூலை 30 திகதியில் உள்ளவாறு வாடகையாக ரூபா 5,230,880 உம் மற்றும் நீர் கட்டணமாக ரூபா 3,360,880 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. பொறியியல் துறையினால் பேணப்பட்டு வரும் இலக்கம் MED/WC/C2/22 கொண்ட கோவையின பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

3.3 செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

-----------------------------------------------------------

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் ரூபா 40 மில்லியன் செலவிடப்பட்டு 2012 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த வஹெர கடைத் தொடர்மாடியில் நூற்றிற்கு சுமார் 10 பகுதியின் தரையை சரி செய்தல் மற்றும் மறைத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த தரை மாடியில் குறைந்த மாதாந்த வாடகை ரூபா 150,000 இற்கான சுமார் 3500 சதுர அடி அளவான பகுதி ஒன்று மீளாய்வாண்டு இறுதி வரை வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாதிருந்தது. மாதாந்த வாடகை ரூபா 250,000 இற்காக கட்டடத்தின் 7320 சதுர அடிப் பகுதியைப் பெற்றுக் கொண்டிருந்த ச.தொ.ச. நிறுவனத்திற்கு குறிப்பிட்ட கட்டடத்தின் காணப்பட்ட வாகன தரிப்பிடமும் களஞ்சிய வசதிகளுக்காக வழங்குவதற்கு நேரிட்டிருந்தது. அதே போல் இவற்றின் மேலதிக வேலைகள் என கட்டடத்தின் முன் பகுதியில் பிரதான பாதைக்கு முகப்பக்கமாக காணப்பட்ட சுமார் 2500 சதுரஅடி அளவான கூரையொன்று மற்றும் தரையில் கற்கள் பதிப்பதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,372,755 தொகையொன்று 2012 ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதும் அண்மையில் உள்ள பாதையை விரிவாக்குதல் காரணமாக குறிப்பிட்ட நிர்மான வேலைகள் அகற்றுவதற்கு நேரிட்டிருந்தது. தற்போது கட்டடத்தின் பல இடங்கள் காயமடைந்து வெடிப்பு ஏற்பட்டிருந்தது. வாடகைக்கு

வழங்கப்பட்டிருக்காத பகுதியில் கண்ணாடி பிரேமின் பீடின் பட்டிகள் விழகிய இடங்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 6,850,000 பெறுமதியான 06 நலன்புரி விடயங்கள் மற்றும் ரூபா 265,800,000 பெறுமதியான 09 மூலதன விடயங்கள் பௌதீக மற்றும் நிதி வளங்கல் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையால் அவற்றை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

4.2 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு ஐயவினாக்கள்

----------------------------------------------------------------------------

2011 கணக்காய்வு அறிக்கையில் காட்டியிருந்தவாறு நுகர்வோர் இலக்கம் 5163 (குருநாகல் போதனா வைத்தியசாலை) மாணி வாசிப்பின் தவறு காரணமாக 2007 ஜுன் முதல் 2008 ஆண்டு காலப்பகுதிக்காக ரூபா 5,229,822 இற்கான நீரக்கட்டணம் (பெறுமதி கூட்டிய வரி உடன்) குறைவாக கணித்துள்ளதுடன் இந்த பிழையாக கணிக்கப்பட தவறின் மீது ஏற்பட்டிருந்த நிலுவை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்